# தந்தை பெரியாரும் அண்ணாவும்!



**1935ம்** ஆண்டு திருப்பூரில் நடந்த செங்குந்த இளைஞர் மாநாட்டில் பெரியாரை முதல் முதலாக சந்தித்தார் அண்ணா. அப்போது முதல் பெரியார் அண்ணாவின் தலைவரானார். அப்போது நடந்த உரையாடலை, 1949ம் ஆண்டு நடந்த தி.மு.க. தொடக்க விழாவில் அண்ணா இப்படி நினைவு கூர்ந்தார்:

“பெரியார் என்னைப் பார்த்து என்ன செய்கிறாய் என்று கேட்டார். படிக்கிறேன். பரீட்சை எழுதியிருக்கிறேன் என்றேன். உத்தியோகம் பார்க்கப் போகிறாயா என்று கேட்டார். இல்லை உத்தியோகம் விருப்பமில்லை. பொது வாழ்வில் ஈடுபட விருப்பம் என்று பதில் அளித்தேன். அன்று முதல் அவர் என் தலைவர் ஆனார். நான் அவருக்கு சுவீகாரப் புத்திரன் ஆகிவிட்டேன்”.

1937ம் ஆண்டு ஈரோடு சென்ற அண்ணா அங்கு பெரியாரின் குடியரசு, மற்றும் விடுதலை நாளிதழ்களில் துணை ஆசிரியராக 60 ரூபாய் சம்பளத்துக்கு வேலைக்கு சேர்ந்தார். அப்போது அவருக்கு வயது 28. அந்த வயதில், அண்ணாவின் திறமையைக் கண்டு வியந்த பெரியார், அதே ஆண்டு துறையூரில் நடந்த சுயமரியாதை இயக்க மாநாட்டை தலைமையேற்று நடத்தும் பொறுப்பை அண்ணாவுக்கு அளித்தார்.

அண்ணா, பெரியார்அதே ஆண்டில் இன்னொரு முக்கிய சம்பவமும் நடந்தது. சென்னை மாகாணத்தில் ஆட்சியைப் பிடித்த ராஜாஜி, பள்ளிகளில் 6ம் வகுப்பு முதல் 8ம் வகுப்பு வரை இந்தி கற்பது கட்டாயம் என்று ஆக்கினார் (பின்னாளில் ராஜாஜியே இந்தித் திணிப்பை எதிர்த்தார் என்பது வேறு). இதை எதிர்த்து பெரியார் போராட்டம் அறிவித்தார். பெரியார் அண்ணா ஆகியோர் 1938ம் ஆண்டு கைது செய்யப்பட்டனர். அண்ணாவுக்கு 4 மாத சிறைவாசம் விதிக்கப்பட்டது. பெரியாருக்கு ஓராண்டு சிறைத் தண்டனை கிடைத்தது.

## பேரறிஞர் அண்ணா ஆட்சியில்

# நிறைவேற்றப்பட்ட வரலாற்றுத் திட்டங்கள்!

**சு**யமரியாதைத் திருமணம் என்ற சீர்திருத்தத் திருமணங்களுக்கு சட்டம் கொண்டுவந்து அங்கீகாரம் வழங்கினார்.

சென்னை மாகாணம் என்றிருந்த தமிழகத்திற்குத் “தமிழ்நாடு” எனப் பெயர் மாற்றம் செய்ய பேரவையில் தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றினார்.





ரூபாய்க்கு படி அரிசி என்ற திட்டம் சென்னை, கோவை யில் செயல்படுத்தப்படும் என அறிவித்து செயல் படுத்தினார்..

சீரணி என்ற ஓர் அமைப்பு முதன் முதலில் ஏற்படுத்தப் பட்டது.

முதன்முதலில் தமிழ்நாட்டில் இரு மொழித் திட்டம் கொண்டு வந்து தமிழ் நாட்டில் இந்திக்கு இடமில்லை என்றார்.

செயிண்ட் ஜார்ஜ்கோட்டைக்கு “தலைமைச் செயலகம்” என பெயர் மாற்றினார்.

தலைமைச் செயலக பெயர்ப்பலகையில் இருந்த “சத்தியமேவ ஜெயதே” என்ற சொல்லை “வாய்மையே வெல்லும்” என மாற்றினார்.

தமிழ் நாட்டு வரலாற்றில் என்றென்றும் நிலைத்து நிற்கிறார் அண்ணா!

# அறிஞர் அண்ணாவை முதன் முதலில் சந்தித்ததைப் பற்றி கலைஞர் !

“**த**ம்பி, தெரியுமா செய்தி? அண்ணா திருவாரூருக்கு வரப் போகிறார், நபிகள் நாயகம் விழாவில் கலந்துகொள்ள...” என்றார் டி.என்.ராமன். இயக்கத்தைக் கட்டி வளர்த்தவர்களில் தலைசிறந்தவர் இவர்.

இந்தச் செய்தி என் செவிகளில் தேனாகப் பாய்ந்தது. ‘அண்ணா வரப்போகிறார். எனது இதயங்கவர்ந்த இலட்சியத் தலைவர் வரப்போகிறார்’ என்று என் உள்ளம் மகிழ்ச்சிப் பெருக்கால் துள்ளியது.அப்போது நான் ஒன்பதாம் வகுப்பில் படித்துக்கொண்டு இருந்தேன். 1938ம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டம் தமிழகத்தில் தீவிரமாக நடந்த போதே, நான் என்னையொத்த சிறுவர்களுக்குத் தலைமை தாங்கி இந்தி எதிர்ப்பு முழக்கங்களுடன் ஊர்வலம் நடத்தியவன். மேலும் ‘முரசொலி’ என்னும் துண்டுத்தாளை அவ்வப்போது வெளியிட்டு என் எண்ணங்களை எழுத்துக்களாக்கி, என் பணியைத் தொடங்கியவன்.

1940ம் ஆண்டில் திருவாரூரில் நடைபெற்ற நீதிக் கட்சி மாநாட்டில்கூட அண்ணாவை அருகில் இருந்து காணும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. இப்போது, இயக்கத் தலைவர்களுடன் தொடர்பு நெருக்கமாகி இருந்ததால், அண்ணாவைக் கண்டு மகிழலாம் எனப் பேராவல்கொண்டு இருந்தேன்.

‘விடுதலை’ ஏட்டில் அண்ணாவின் எழுத்துக்கள் என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு இருந்தன. பின்னர், அவர் காஞ்சியில் இருந்து ‘திராவிட நாடு’ இதழைத் தொடங்கியதும் ‘இளமைப் பலி’ என்ற தலைப்புடன் ‘திராவிட நாடு’ இதழுக்கு ஒரு கட்டுரை தீட்டி அனுப்பினேன். அதுவும் விரைவில் அண்ணா அவர்களால் வெளியிடப்பட்டது.

அண்ணாவின் இதழில் என் எழுத்துக்கள் இடம்பெற்றதும் என் உற்சாகம் கரை புரண்டது. என் எழுத்துக்களை அண்ணா அங்கீகரித்து விட்டார் அல்லவா?இந்தச் சமயத்தில் தான் அண்ணா திருவாரூர் வரும் செய்தி தித்திப்பாக எனக்குத் தரப்பட்டது. என் இயல்பிற்கேற்றவாறு கூட்டத்துக்கான முன்னேற்பாடுகளில் நானும் முனைந்தேன். விளம்பரத் தாட்கள் விநியோகித்தல், சுவரொட்டி ஒட்டுதல், கொடி தயாரித்தல், மேடை அமைத்தல் போன்ற சிறு சிறு ஆக்க வேலைகளில் ஈடுபட்டேன்.

‘‘கருணாநிதி! உன்னை அண்ணா அழைத்து வரச் சொன்னார்” என்று வந்தார் ஒருவர்.

“அண்ணாவா?”

“ஆமாம், ஆமாம். ‘திருவாரூரில் கருணாநிதி என்பவர் யார்? அவரை நான் பார்க்க வேண்டும்” என்றார். “நமது இயக்கத்தில் நீ ஒரே ஒரு கருணாநிதிதானே!” என்றார்.

கையைத் துடைத்துக்கொண்டு உடனே புறப்பட்டேன். என் உள்ளத்தில் அச்சம் ஒரு பக்கம், ஆனந்தம் ஒரு பக்கம், வியப்பு ஒரு பக்கம், திகைப்பு ஒரு பக்கம், மகிழ்ச்சி பாதி, பயம்பாதி. மனத்தைத்திடப்படுத்திக்கொண்டு புறப்பட்டேன்.

வக்கீல் வெங்கடாச்சாரியார் வீட்டின் மாடியில் அண்ணாவைத் தங்கவைத்து இருந்தார்கள். அண்ணாவைச் சூழ்ந்து திருவாரூரின் இயக்கப் பிரமுகர்களான திரு டி.என்.ராமன், டி.என்.லட்சப்பா, ரங்கராசு, சிங்கராயர் போன்றோர் அமர்ந்து இருந்தனர்.

அண்ணாவுக்கு வணக்கம் தெரிவித்து விட்டு, “அழைத்தீர்களாமே?” என்றேன். வார்த்தைகள் தெளிவாக வரவில்லை.

“நீதான் கருணாநிதியா?” வெண்கல மணி ஒலித்தது.

“ஆமாம், அண்ணா!”

“என்ன செய்கிறாய்? படிக்கிறாயா தம்பி!”

“ஆமாம்.”

“ ‘இளமைப் பலி’ எழுதியது நீதானே?”

“நான்தான் எழுதினேன்!”

“சரி, கட்டுரை நன்றாகத்தான் இருந்தது.



ஆனால், உனக்கு இப்போது அந்த வேலை தேவை இல்லை. படிப்பை முடித்துப் பட்டம் பெற்ற பிறகு எழுதத் தொடங்கலாம். கவனமாகப் படி!” என்றார் அண்ணா.

என்ன பதில் சொல்வது என்று எனக்குத் தெரியவில்லை. எழுத்துப் பணியை நிறுத்தச் சொல்கிறாரே! என்னால் இயலுமா?’

‘வருகிறேன், அண்ணா!” என்று மட்டும் சொல்லி விட்டு அங்கிருந்து நகர்ந்தேன்.

அந்த முதல் சந்திப்பு இன்று என்னைத் தமிழகத்தின் முதல் அமைச்சராக உயர்த்தி இருக்கிறது.

ஏறத்தாழ 26 ஆண்டுகள் அண்ணாவுடன் இணைந்துவிட்ட நான், அவர் கிழித்த கோட்டைத் தாண்டியதில்லை. ‘‘படிப்பில் கவனம்கொள்’’ என்றாரே, அந்த ஆணையை மட்டும்தான் மீற நேர்ந்திட்டது.

“இன்று கருணாநிதி நான் சொல்வதை அப்படியே நூற்றுக்கு நூறு கேட்டு நடக்கும் நல்ல பழக்கம் அன்றே அவருக்கு இருந்திருக்குமானால், இன்று அவர் ஒரு பல்கலைக் கழகப் பட்டதாரியாக இருந்திருப்பார்!” என்று அண்ணா பலமுறை வேடிக்கையாகச் சொல்லியிருக்கிறார்!

**-கலைஞர்**

**நன்றி: ‘ஆனந்த விகடன்’ 18.1.1970**

# அண்ணாவும் பேராசிரியரும்!



**செ**ன்னைச் சிறைச்சாலையில் அண்ணாவுடன் நானும், கே.ஏ. மதியழகனும், கே.பி. சுந்தரமும், டி.எம். பார்த்தசாரதியும், டி.கே. பொன்னுவேலுவும் சிறைப்பட்டிருந்த காலத்தில். தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராக ஒருவரைத் தேர்ந்தெடுக்க கழகச் சார்பில் யாரை நிறுத்துவது என்பதில் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால், அந்த நாட்களில் மேலவை உறுப்பினராக இருந்த புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். தனது பதவியை ராஜினாமா செய்து, விலகிக் கொண்டார். அதுபற்றி அண்ணாவிடம் கூறாமலே அவர் தீர்மானித்து நடந்துகொண்டது அண்ணாவிற்குப் பெரும் வருத்தம் தந்தது. அதுகுறித்து அவருக்கு வந்திருந்த தந்தியை மடியில் மூடி வைத்துக் கொண்டு, அன்று முழுவதும் உண்ணாமலே பட்டினியில் வாடி இருந்தார். அவரது முகத்தில் சோகம் படிந்திருந்தது. அதற்குக் காரணமான அந்தச் செய்தியை மறுநாள்தான் நானும். நண்பர்களும் அறிந்தோம். அதுபற்றி அண்ணா யாரிடமும் பேசவே விரும்பவில்லை. இருப்பினும் நாங்கள் வலியுறுத்தி கேட்டுக்கொண்டதன் பயனாக, அண்ணா இரண்டாவது நாள் இரவு தான் ஒரு சிறிது உணவருந்தினார். அப்படி ஒருவர் பதவி விலகியதை அவரால் தாங்கிக் கொள்ள இயலவில்லை. இந்த இயக்கத்தில் உள்ள யாரையும் நான் இழக்க விரும்பவில்லை. இதன் இலட்சியம் காக்கப் படவும், நிறைவேறவும் 10, 11ஆக கழகத் தோழர் எண்ணிக்கை வளர வேண்டுமே தவிர, ஒன்பது ஆகக்கூடாது என்றுதான் அண்ணா கூறினார்.

**- பேராசிரியர்**